# <u>Sub Court, Eraniel</u>

**O.S. No.47/2022**

Date: 10.09.2025.

பி.வா.சா.2 - திரு. மணிகண்டன்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாதி தாக்கல் செய்துள்ள பாகபிரிவினை பத்திரம் 1968 ல் போடப்பட்டதாகும். அதில் 5 பங்குகள் பிரிக்கப்பட்டன. அதில் 6 வது பங்கு வழிபாதையாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த வழிபாதைக்கு தெற்கு பக்கம் யாருக்கு பங்கு கொடுக்கப்பட்டது என்ற விபரங்கள் எனக்கு தெரியாது. தற்போது வழிபாதைக்கு தெற்கு பக்கம் நாககனி, மணிகண்டன், அரிகிருஷ்ணன் பெயரில் எழுதியிருக்கிறார்கள். நாககனி அங்கு வீடு கட்டி சுற்றி மதில்சுவர் அமைத்து குடிவசிக்கிறார் என்றால், சரிதான். அரிகிருஷ்ணனும் வீடு கட்டி, சுற்றி மதில்சுவர் அமைத்து குடி வசிக்கிறார் என்றால், சரிதான். நாககனி வீடு கட்டி நான்கு வருடங்கள் ஆகிவிட்டன. அரிகிருஷ்ணன் வீடு கட்டி 10 வருடங்கள் இருக்கும், நாககனி மற்றும் அரிகிருஷ்ணன் ஆகிய இருவரும் வழிபாதை பிரச்சனைக்காக இதுவரையில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.